# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

### தமிழ் மாநிலம்

## ஒப்பந்த ஊழியருக்கு நிலுவைத்தொகை

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய சங்கம், தமிழ் மாநில சங்கம், BSNLCCWF மற்றும் TNTCWU ஆகிய சங்கங்களின் கடுமையான முயற்சிகளின் காரணமாக இந்திய நாடு முழுவதும் தொழிலாளர் நல ஆணையர் நிர்ணயித்த ஊதியம் என்பது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஊதியத்தை BSNLல் வழங்க வேண்டும் என BSNL கார்ப்பரேட் அலுவலகம் 06.05.2010 அன்று அனைத்து மாநில நிர்வாகத்திற்கும் உத்தரவு வெளியிட்டிருந்தது. ஆனால் தமிழகத்தில் இது பல மாத காலம் கழித்து நமது போராட்டங்களுக்கு பின்னர் அமுலாக்கப்பட்டது.

நமது தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும், TNTCWU சங்கமும் இணைந்து தொழிலாளர் நல ஆணையர் Sweeping and Cleaning-கிற்கு உத்தரவு வெளியிட்ட தேதியான 07.08.2008 முதல் இந்த ஊதியம் அமுலாக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. அந்த வழக்கு எண் WA 770/2013 விசாரணை முடிவடைந்து 27.03.2015 அன்று தீர்ப்பு வெளியாகி உள்ளது.

தொழிலாளர் நல ஆணையர் இதர பணிகளுக்கு உத்தரவு வெளியிட்டிருந்த 20.05.2009 முதல் இந்த புதிய ஊதியம் முன் தேதியிட்டு அமுலாக்கப்பட வேண்டும் என இந்த தீர்ப்பு தெரிவித்துள்ளது.

நமது இரண்டு மாநில சங்கங்களும் வழக்காடி பெற்றுள்ள இந்த தீர்ப்பின் மூலம் 20.05.2009 முதல் இந்த புதிய ஊதியம் மாவட்டங்களில் அமுலான தேதிவரை அப்போது பணியாற்றிய அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் நிலுவைத் தொகை கிடைக்கும். இதன் மூலம் நீதி வென்றுள்ளது.

இந்த வழக்கில் நமக்காக வாதாடிய சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்கள் தோழர்கள் வைகை மற்றும் அன்னா மேத்யூ ஆகியோரை தமிழ் மாநில சங்கங்கள் மனதார நன்றியோடு பாராட்டுகிறது. சரியான தீர்ப்பை வழங்கிய நீதியரசர்களையும் வாழ்த்துகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**C.வினோத்குமார்**
**மாநில செயலாளர்**
**TNTCWU**

**A.பாபு ராதாகிருஷ்ணன்.**
**மாநில செயலாளர்**
**BSNLEU**